தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 05 2013

**பன்முகதேர்வு வினாக்கள் பகுதி 1 வருடம்: 05**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வெற்றியின் எதிர்ச்சொல்<br>மாணவி 2. பெண் 3. அம்மா 4. சிறுமி | 1 | 2 | 3 | 4 |
| 2 | நாங்கள் கோயிலுக்குப்<br>1.போனேன் 2.போகிறாள். 3.போகிறோம். 4. போனான். | 1 | 2 | 3 | 4 |
| 3 | தந்தை என்பதன் எதிர்ப்பால் சொல்<br>அம்மா 2. மாதா 3. அப்பா. 4. தாய் | 1 | 2 | 3 | 4 |
| 4 | மல்லிகை மலர் இனிய -------------- உடையது.<br>1.நிறம் 2. வாசனை 3. மனம் 4. குணம் | 1 | 2 | 3 | 4 |
| 5 | யானையின் இளமைப்பெயர்<br>1. கன்று 2. குட்டி 3. குஞ்சு 4. குருளை | 1 | 2 | 3 | 4 |
| 6 | பொருந்தாத சொல்<br>1. விருப்பு 2. நித்திரை 3. விழிப்பு 4.தூக்கம் | 1 | 2 | 3 | 4 |
| 7 | மைதானம் என்பது<br>1. காலப்பெயர் 2. இடப்பெயர் 3.பொருட்பெயர் 4.தொழிற்பெயர் | 1 | 2 | 3 | 4 |
| 8 | நாங்கள் இருவரும் சேர்ந்து<br>1. பாடுகிறாய் 2. பாடுகிறோம். 3. பாடுவேன் 4. பாடுகிறான். | 1 | 2 | 3 | 4 |
| 9. | காகம் கரைவது போல குயில் -.<br>1. கத்தும் 2. கூவும் 3. அகவும் 4. பேசும் | 1 | 2 | 3 | 4 |
| 10. | ஆலயம் தொழு. இதில் ஆலயம் என்பது.<br>1. மாதா 2. கடவுள் 3. வீடு 4. கோயில் | 1 | 2 | 3 | 4 |
| 11. | சிறு துளி பெரு<br>1. வெல்லம் 2. வெள்ளம் 3. வள்ளம் 4. மழை | 1 | 2 | 3 | 4 |
| 12. | எண்ணும் --------- கண் எனத் தகும்.<br>1. அழகு 2. கல்வி 3. எழுத்தும் 4. படிப்பும் | 1 | 2 | 3 | 4 |
| 13. | கண்ணுக்கு விருந்தளிக்க முடியாத கருவி.<br>1. தொலைக்காட்சி 2. வானொலி 3. கணினி 4. சினிமா | 1 | 2 | 3 | 4 |
| 14. | படி என்பதன் தொழிற்பெயர்<br>1. படித்தான் 2. படித்தல் 3. படித்தாள் 4.படித்தார் | 1 | 2 | 3 | 4 |
| 15 | ஆலும் வேலும் ----------- உறுதி<br>1. காதுக்கு 2. பல்லுக்கு 3. கண்ணுக்கு 4. பதிலுக்கு | 1 | 2 | 3 | 4 |
| 16 | ------------ திரைப்படம் பார்க்கிறார்கள்<br>1 நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |

.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 17. | சரியான வசனம் எது?<br>1. அவன் நாயை வளர்த்தான் 2. அவன் நாயை வளர்த்தது<br>3. அவன் நாயை வளர்த்தாள். 4. அவன் நாயை வளர்த்தனர் | 1 | 2 | 3 | 4 |
| 18. | தமிழ் ஒரு இனிய ---------- மொழி<br>1. புதிய 2. நாகரீக 3. பழைய 4. கலப்பட | 1 | 2 | 3 | 4 |
| 19. | சகோதரனின் எதிர்பால் சொல்<br>1. தலைவி 2. சகோதரி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | பந்து ------------- போய் விழுந்தது.<br>1. தூரத்தால் 2. தூரத்தில் 3. மேலே 4. தூரத்துக்கு | 1 | 2 | 3 | 4 |
| 21 | தமிழர்களின் புதுவருடம் வரும் மாதம்<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | ீடயல என்பது ---------<br>1. படி , 2. விளையாடு, 3. நட 4. தூங்கு | 1 | 2 | 3 | 4 |
| 23 | எங்கள் வீட்டுவேலைகளை நாங்களே<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தான். | 1 | 2 | 3 | 4 |
| 24 | சிற்றூர் பிரித்து எழுதினால்<br>1. சிறுமை ு ஊர் 2. சிற்று ு ஊர்<br>3. சிறிய ு ஊர் 4. சிறு ு ஊர் | 1 | 2 | 3 | 4 |
| 25 | அவன் மாம் --------------- வெட்டினான்<br>1. பழத்தை 2 .பழத்துக்கு 3. பழத்தில் 4. பழத்தால் | 1 | 2 | 3 | 4 |
| 26 | அட்ட திக்கு என்பது ---------வகை திசைகளைக் குறிக்கும்<br>1. ஆறு 2. ஐந்து 3. எட்டு 4. ஏழு | 1 | 2 | 3 | 4 |
| 27 | சிறிய – ஆடை சேர்த்தெழுதினால்<br>1. சிறுஆடை 2. சிறுவாடை 3. சிற்றாடை 4. சிறியாடை | 1 | 2 | 3 | 4 |
| 28 | முனைநெல என்பது -<br>1. இதயம் 2. ஈரல் 3. சிறுநீரகம் 4. எலும்பு | 1 | 2 | 3 | 4 |
| 29 | மாலா மரத்திலிருந்து பூ ------------------ போனாள்.<br>1. படிக்கப் 2. பறிக்கப் 3. விளையாடப் 4. பாடப் | 1 | 2 | 3 | 4 |
| 30 | அவள் இதயம் --------- எனத் துடித்தது<br>1. சலசல 2. படபட 3. கடகட 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

.

**வினாக்கள்** **பகுதி 2** **வருடம்: 05**

1. **பின்வரும் உரையாடலை வாசித்துஇ பின் அதன் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

ராணி: லதா நீ நமது பாடசாலையில் எல்லாப் விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கு பற்றிஇ முதலாவதாகவும், சிறந்த மாணவியாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கும் செய்தி கேள்விப்பட்டேன். உனக்கு எனது பாராட்டுக்கள்.

லதா: உன் பாராட்டுக்களுக்கு மிக்க நன்றிகள் ராணி.

ராணி: நீ எப்பொழுதும் விடாமுயற்சியுடனும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்வாய். சிறிது நேரத்தையும் வீணாக்காமல் முயற்சி செய்து கொண்டே இருப்பாய். எனவே இந்தச் பரிசுக்கு நீ மிகவும் பொருத்தமானவள்தான்.

லதா: நான் என்னால் முடிந்த முயற்சியைத் தான் செய்தேன்.

ராணி: நான் தான் எதிலும் விரும்பி பங்கெடுப்பதில்லை. வீணாக பொழுதினைக் கழித்துக்கொண்டு இருக்கிறேன். நீயும் எத்தனையோ முறை எனக்குப் பல புத்திமதிகள் சொல்கிறாய். நான் அதைக் கேட்பதில்லை.

லதா: நானும் படிக்கும் நேரங்களில் படிக்கிறேன். மிகுதி நேரங்களை விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பற்றுகிறேன். அதனால் தான் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக பரிசு பெற்றிருக்கிறேன்.

ராணி: நீ சொல்வது மிகவும் சரி. இதைப்போல் எல்லா மாணவர்களும் நினைத்து முயற்சி செய்தால் படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் பங்கு பற்றி சிறந்த மாணவியாக நல்ல புள்ளிகள் பெற்று நல்ல பெயரைப் பெறலாம். நானும் இனி உன்னைப் போலவே அதிக முயற்சி செய்வேன்.

லதா: இதைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது ராணி.

அ) மேல் உள்ள கலந்துரையாடலில் பங்கு கொண்டவர்கள் யார்?

________________________________________________________

ஆ) சிறந்த மாணவியாகத் தெரிவு செய்யப் பட்ட மாணவியின் பெயர் என்ன?

________________________________________________________

இ) எதற்காக லதா சிறந்த மாணவியாக தெரிவு செய்யப்பட்டாள்.?

________________________________________________________

ஈ) மேலுள்ள கலந்துரையாடலில் இருந்து நீர் பெற்ற அறிவுரை என்ன?

________________________________________________________

உ) விடாமுயற்சியின் எதிர்க் கருத்துள்ள சொல் எது?

**(10 புள்ளிகள்)**

.

2. **அடைப்புக்குள் உள்ள வினைச்சொற்களை இறந்தகாலத்தில் மாற்றி வசனங்களை அமைக்க.**

பாலனும் அவன் தம்பியும் நேற்றுக் கால்ப்பந்து விளையாடப் ________________ (போ).

சந்திரனும் அங்கு விளையாட ________________________ (வா).

விளையாட்டு மைதானத்தில் எல்லோரும் சேர்ந்து ____________________ (விளையாடு).

பின் மாலையில் அவர்கள் தம் வீடு ____________________ (திரும்பு).

அதன் பின் அவர்கள் ____________________ (குளி).

தமது பாடங்களை ____________________ (படி).

தமது தாயார் கொடுத்த உணவை ____________________ (உண்) .

சிறிது நேரம் ஓய்வாக ____________________ (இரு).

அப்போது தொலைக்காட்சி ____________________ (பார்).

பின் அவர்கள் உறங்கச் ____________________ (செல்)

**(10 புள்ளிகள்)**

3. **பின்வரும் வாக்கியத்தை இரு வாக்கியங்கள் ஆக்குக.**

**உ.ம்: சிறுவன் வாழைப்பழத்தை உரித்து தின்றான்.**

சிறுவன் வாழைப்பழத்தை உரித்தான்
சிறுவன் வாழைப்பழத்தைத் தின்றான்.

ராமனும் பாலனும் கடைக்குச் சென்றார்கள்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

மாமா தம்பியை அழைத்து மிட்டாய்ப்பெட்டியைக் கொடுத்தார்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

நாயும் பூனையும் எலியைப் பிடிக்கப் துரத்தின.

________________________________________________________________________________

________________________________________________________________________________

கிரி தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் உடையவன்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

.

மல்லிகைப்பூ மிகுந்த மணமும், அழகும் உடையது.

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

4. <u>**சேர்த்தெழுதுக**</u> <u>**பிரித்தெழுதுக**</u>

| | | | |
|---|---|---|---|
| திரு-அருள் | ____________ | குறைவில்லை | ____________ |
| உடல்-பயிற்சி | ____________ | இன்னிசை | ____________ |
| மலை – உச்சி | ____________ | எண்ணூறு | ____________ |
| அழகு – ஆடை | ____________ | சிற்றாறு | ____________ |
| ஊன்று – கோல் | ____________ | பொருளுதவி | ____________ |

(10 புள்ளிகள்)

**5 நடந்து முடிந்த மெல்பேர்ண் கப் பற்றி அறிந்த தெரிந்தவற்றை 10 வசனங்களில் எழுதுக**





______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

.

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

**(10 புள்ளிகள்)**

6. **பின்வரும் மாறிக் கிடக்கும் சொற்களைக் கருத்தமைய மாற்றி எழுதுக.**

ஒளிந்து - புதருக்குள் - எலி - ஓடி - கொண்டது

______________________________________________________________________

ஒரு - பள்ளிக்கூடம் - எமது – அருகில் - வீட்டுக்கு - இருக்கிறது

______________________________________________________________________

எளிமையாக – புத்தகத்தில் - பாடல்கள் -இருக்கின்றன.

______________________________________________________________________

புல் - வயலில் - மாடுகள் - மேய்ந்தன.

______________________________________________________________________

தஞ்சைக் - கட்டுவித்தான் - இராஜராஜசோழன் - கோயிலைக்

______________________________________________________________________

**(10 புள்ளிகள்)**

7. **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.**

## மையும் தாளும்

நிரைய எழுதப்பட்ட தாள் ஒன்று மேசை மேல் இருந்தது. அதன் பக்கத்தில் வெள்ளைத் தாள்கள் இருந்தன. தன் மீது எழுதப்பட்டது பற்றி தாளுக்குச் சினம் வந்தது. வெண்மையாயிருந்த தன்னைக் கருப்பாக்கிய மையை அழைத்தது.

"என்னை இந்த நிலைக்கு ஏன் மாற்றினாய்? இந்தத் தீமையை நீ ஏன் செய்தாய்? என்னுடைய வெண்மையை நான் இழந்து விட்டேனே? அது இனி திரும்பக் கிடைக்காதே ஏன் இப்படி என்னைக் கறைப்படுத்தினாய்" என்று கேட்டது எழுதப்பட்ட தாள்.

" நீ வருந்துவது சரியன்று. அப்படிச் செய்யாவிட்டால் நீ வெறும்

.

தாளாகத் தான் இருந்திருப்பாய். நான் உன்மேல் படிந்து சொற்களை உருவாக்கினேன். நீ இப்போது ஒரு செய்தியைத் தாங்கியுள்ளாய் நான் உன்னைப் பயனுள்ளதாக்கி விட்டேன்" என்று பதில் அளித்தது மை.

சற்று நேரத்திற்குப் பிறகு அங்கு ஒருவன் வந்தான் எழுதப்பட்டிருந்த தாளை எடுத்துப் படித்தான். அதைப் பத்திரமாக மடித்துத் தன் பையினுள் வைத்துக்கொண்டு போனான். வெள்ளைத் தாள்களை அவன் பொருட்படுத்தவே இல்லை.

வெள்ளை மேல் கருப்பாக எழுதுவது அதன் மதிப்பை உயர்த்தும். சொற்கள் உள்ள தாள்களை மக்கள் பத்திரப்படுத்துவார்கள்

**(10 புள்ளிகள்)**

.